இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி


Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 20 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 14 – சனிக்கிழமை 30 ஆகஸ்ட் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 20 : Thiruvalluvar Year - 2056 - Aavani 14 - Saturday 30 August 2025 - Chennai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (29.8.2025) சென்னையில், நாடாளுமன்ற உறுப்பினரும், கழக சட்டத்துறைச் செயலாளருமான என்.ஆர் இளங்கோ மகள் இராகவி இளங்கோ – சச்சிந்தர் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இத்திருமண விழாவில், திருமதி துர்கா ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், திருச்சி சிவா உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

# ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார் திருஉருவப் படம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சென்னை, ஆக. 30-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (29.08.2025) காலை, சென்னை -நீலாங்கரையில் உள்ள 'ஆர்.கே.கன்வென்ஷன்' சென்டரில் கழக சட்டத் துறைச் செயலாளரும், மாநிலங்களவை கழக உறுப்பினருமான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ புதல்வி இராகவி - சச்சிந்தர் ஆகியோரது திருமணத்தைத் தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்.**

**அவ்வுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜெர்மனி - இங்கிலாந்து நாடுகளுக்கு தாம் மேற்கொள்ளும் பயணம் குறித்துக் குறிப்பிடுகையில், "உலகின் மிகப்பெரிய அறிஞர்களைத் தந்த, புகழ்மிக்க அறிவுசார் நிறுவனமாகப் போற்றப்படும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், அறிவாசான் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறக்கப்பட இருக்கிறது! அதை என்னுடைய திருக்கரங்களால் திறந்து வைக்க இருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கும்போது நான் இப்போதே மகிழ்ச்சிக் கடலில் மிதந்துகொண்டு இருக்கிறேன்." என்று உணர்ச்சி மேலிட அறிவித்தார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், என்.ஆர்.இளங்கோ, கழகத்திற்கு ஆற்றிவரும் பல்வேறு பணிகளையும்**



**பலபட எடுத்துரைத்து, அப்பணிகளுக்காக தலைமைக் கழகம் சார்பில் தமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதாகப் புகழ்ந்துரைத்தார்.**

**இம்மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

நம்முடைய கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அவர்கள் இல்லத்தில், அவருடைய அன்பு மகளுக்கு நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சி என்பது அவரே இங்கு குறிப்பிட்டுச் சொன்னார். இது என்னுடைய இல்லத்திருமணம் மட்டுமல்ல. கழகக் குடும்பத்தின் திருமணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார். அப்படிப்பட்ட இந்தக் குடும்பத் திருமணவிழாவில் நானும் பங்கேற்று இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை யேற்று மணவிழாவை நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெருமைப்படுகிறேன்.

**தந்தை வழியில் கொள்கைப் பிடிப்போடு கடமையாற்றும் தனயன் என்.ஆர்.இளங்கோ!**


என்.ஆர்.இளங்கோ அவர்களைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றுசொன்னால், அவர் தனது தந்தையின் அடியொற்றி, கழகத்தில் கொள்கைப் பிடிப்போடு தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்.

அவருடைய தந்தை மரியாதைக்குரிய ஆர்.என். அரங்கநாதன் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பைப் பெற்று, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்காகப் பணியாற்றி கழகத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

**மூத்த வழக்கறிஞர் என்.நடராஜன் பட்டறையில் பயிற்சி பெற்றவர்!**

தந்தையைப் போன்றே, தனயனாக கழகக் கொள்கைகள் மீது ஈடுபாடு கொண்டு நம்முடைய தலைவர் கலைஞர் மீது, அதேபோல் என் மீது, இந்தக் கழகத்தின் மீது பற்று கொண்டு நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள் தொடர்ந்து கழகத்திற்காக பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடியவர்.

அவர் திருச்சி சட்டக் கல்லூரியில் படித்த காலத்தில் இருந்தே கழகப் பணி



களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்.

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மறைந்த நம்முடைய மூத்த வழக்கறிஞர் என். நடராஜன் அவர்களின் பட்டறையில் பயிற்சி பெற்றவர் நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள். அனைத்து நீதிமன்றங்களிலும் தனது வாதத் திறமையால் சிறப்பாகச் செய்து காட்டியவர்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

### தமிழ்நாட்டில்

# தி.மு.க.விற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு தொடர்ந்து அதிகரிப்பு!

## 'சி வோட்டர்' – 'இந்தியா டுடே' கருத்துக் கணிப்பு உறுதிப்படுத்துகிறது!

**சென்னை, ஆக. 30-**

**தமிழ்நாட்டில் தி.மு.க.விற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்து வருவதாக, 'சி வோட்டர்' - 'இந்தியா டுடே' நடத்திய புதிய கருத்துக்கணிப்பில் உறுதிப்படுத்தியுள்ளது.**

தமிழ்நாட்டில் 'சி வோட்டர்' - 'இந்தியா டுடே' இணைந்து மக்களவைத் தொகுதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தற்போது தேர்தல் நடைபெற்றால் தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி, 47 சதவிகித வாக்குகளை பெற்றிருந்த நிலையில், தற்போது தேர்தல் நடத்தினால் வாக்கு சதவிகிதம் மேலும் அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் தி.மு.க.விற்கு செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்தித் திணிப்பு உள்ளிட்ட மாநில உரிமைகளில் ஒன்றிய அரசுக்கு எதிரான தி.மு.க.வின் போராட்டங்களுக்கும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் நிலைப்பாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு உள்ளதாக 'சி வோட்டர்' கருத்துக் கணிப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணியின் வாக்கு சதவிகிதம் தொடர்ந்து சரிந்து வருவதாகவும் 'சி வோட்டர்' - 'இந்தியா டுடே' கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ட்ரம்ப்பிடம் வாயே திறக்காத மோடி!**

